1968 மார்ச், 18]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள் 242, 243 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

தஞ்சை தொழில் ஒப்பந்தச் சங்கம்

*244 வினா.—திரு. ஆ. கு. சுப்பையா : மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் தொழிலாளர் கூட்டுறவுத் தொழில் ஒப்பந்த சங்கம் செயல்பட்டு வருகிறதா?

(இ) எந்தெந்த இலாகாவினர் இச் சங்கத்தினருக்கு வேலை ஒப்பந்தம் கொடுத்து வருகிறார்கள்?

(உ) அவ்வாறு கொடுக்கப்பட்டு வந்தால் அதன் விபரம்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) நெடுஞ்சாலைத் துறை, போலீஸ் துறை, ஹரிஜன நலத்துறை, பொதுப்பணித்துறை, கூட்டுறவுச் சங்கங்கள், நகராட்சி மன்றங்கள்.

(உ) பேரவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், இந்தத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் ஏழை அரிசனங்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, வெள்ளை அடிக்கும் வேலைகளை எல்லாம் எல்லாத் துறையினரும் இவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒயிட் வாஷிங்குக்கு முன்டம் வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். எந்தெந்தத் துறையிலே என்று எழுதி அனுப்பினால் பரிசீலிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், தற்போது தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கத் துறையில் உள்ள வேலைகளைக் கொடுக்க வேண்டுமென்று ஒரு ஜி.ஓ இருக்கிறது. அந்த ஜி.ஓ.-வில் 'டிபார்ட்மெண்ட் மே' என்று இருக்கின்ற காரணத்தால், அந்த 'மே' என்ற வார்த்தையைப் பயன்படுத்திக் கொண்டு பல துறையினரும் வேலைகளை இப்போது கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுப்பது இல்லை. ஆகவே 'மே' என்பதை மாற்றி 'ஷல்' என்று அமைத்தால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கத் துறையில் வேலைவாய்ப்பு இருக்கும். ஆகவே, அதனைக் குறித்து ஆலோசித்து அரசு வேண்டியதைச் செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவு முறையில் அமைக்கப்படும் இந்தத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நல்ல வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. ஆனால், கட்டாயம் கொடுக்க வேண்டும் என்று ஏற்பட்டுவிட்டால் ஒரு இடத்தில் அந்தக் கூட்டுறவுச் சங்கம் சரியாக வேலை செய்யாவிட்டால் அரசாங்கத்தின் வேலைகள் தடைப்படும். இப்போது அரசாங்க அதிகாரிகள் எந்தெந்த இடத்தில் வசதிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் அவற்றைக் கொடுத்து வருகிறார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் இயங்கக் கூடிய தன்மையில் ஊக்குவிக்கக்கூடிய அளவுக்கு சர்க்கார் அதற்கான முயற்சிகளில் கவனம் செலுத்த வேண்டும் என்பது தான் இன்றைக்கு உள்ள நிலைமை. அப்படி இருக்க வெள்ளை அடிப்பது அல்லது தடுப்புச் சுவர் கட்டுவது, வண்ணம் பூசுவது என்று இந்த சின்னஞ்சிறு வேலைகள்தான், எந்த வருஷத்தில் இருந்து எந்த வருஷம் வரையில் என்று, இப்போது 9 வேலைகள் கொடுக்கப்படுகின்றன. ஆகவே, அது கட்டாயமாக கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் பொருத்தமாக இருக்கமுடியும்.

@ 534-ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாகப் போடுங்கள்.

திரு வி. கே. கோதண்டராமன் : பாதுகாப்பாக எஞ்சினியர்களை நியமித்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேலைகள் கொடுக்கக்கூடிய அளவுக்கு ஊக்குவிக்கக்கூடிய தன்மையில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்.—கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஊக்கம் தர வேண்டும் என்பது நியாயமான கோரிக்கை. ஆனால் அங்குள்ள சங்கங்களின் அமைப்பைப் பொருத்துத்தான் எந்த வேலை கொடுக்கப்பட முடியும் என்பதை முடிவுகட்ட முடியும். இந்தச் சங்கத்தைப் பொறுத்தவரையில் இதன் பங்குத் தொகை ரூ. 1,565. அங்கத்தினருடைய எண்ணிக்கை 47 தான். இந்த எண்ணிக்கையைக் கொண்டு, இந்த தலைக் கொண்டு, இந்தச் சங்கத்திற்கு அரசாங்கத்திலிருந்து ஒரு அதிகாரி போடப்பட்டு அவர்களுக்கு உதவியாக இருக்கிறார்கள். இது போன்ற நல்ல சங்கங்கள் முன்வந்து நிறைய வேலைகளை எடுக்கும் வாய்ப்பிருந்தால் நிச்சயமாக அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, அரிசன மக்களால் தொடங்கப்பட்டு இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரிசனங்களிலேயே ஒருவர் தலைவராக இல்லாமல் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த ஒருவரைத் தலைவராக ஏற்படுத்துவது நியாயமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது ஹைபாதடிகல் க்வெஸ்டினாக இருக்கிறது. எந்தச் சங்கத்தில் எப்போது போடப்பட்டார், எந்தச் சங்கத்தில் எப்படித் தேர்தல் நடந்தது என்று விவரம் அனுப்பினால் பரிசீலிக்கப்படும்.

Land Utilisation Order

*242 Q.—Thiru K. Vinayakam : }
Thiru A. K. Subbiah : } Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government propose to enforce strictly "Land Utilisation Order, 1961" fully; and

(*b*) the action proposed to be taken against such of those patta holders who would allow the lands fallow ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) சமிழ்நாடு 1961-ம் ஆண்டு நிலப் பயன் பாட்டு ஆணையின்படிக்கான விதிகளைச் செயல்படுத்துமாறு கலெக்டர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதில் பயிர் விளைவிக்காமல் விடப்பட்டுள்ள பட்டா நிலங்களை அரசாங்கம் மேற்கொண்டு, அதில் பயிரிடும் உரிமையை பொது ஏலத்தில் குத்தகைக்கு விடும் நிதித்துறை உள்ளது.

திரு. கே. விநயகம் : இந்த ஆர்டரின் அடிப்படையில் இது வரையில் எவ்வளவு நிலம் நம் மாநிலத்தில் வீணாகப் போடப்பட்டிருப்பதைத் திரும்பவும் விவசாயத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்? அப்படிச் சொல்லியும் அவர்கள் செய்யவில்லையென்றால், எவ்வளவு நிலத்தை அரசாங்கமே எடுத்து எப்பொழுது விவசாயத்திற்கு உள்ளாக்கி இருக்கிறது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது வரையிலும் 45,366·24 எக்கர் நிலம் இம்மாதிரி விவசாயத்திற்கு வாராமல் விடப்பட்டிருக்கிறது. அதில் 1,253·30 ஏக்கர் நிலத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுவது என்று தீர்மானித்திருக்கிறது. அதிக உணவு உற்பத்தி 621·73 டன். நிலம் விவசாயிகளுக்கு ஐந்தாண்டு காலத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது.